Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—6—50) ❖ வெளியீடு (8—6—50) [இதழ் 272

டாலர் ஏகாதிபத்யத்தில் புதிய கட்டம்

பொதுநலத்தின் பெயரால் பொதுவுடைமைக்கு எதிர்ப்பு

—(0)—

அல்லல்கள் அனைத்தும் தீர்ப்போம் என சாகசப் பேச்சு

—(0)—

முதலாளித்வத்தின் முஸ்தீபு உருவாகிறது

உலகில் முன்னேற்றம் அடையாத பகுதிகளில் வாழும் லட்சக்கணக்கான மக்களின் வறுமையை நீக்கி வளமான வாழ்வையும், நோயை நீக்கி நலவாழ்க்கையையும் அறியாமையை நீக்கி கல்வியையும் வளரச் செய்ய, சிறுகச் சிறுக நாம் உதவி செய்து வருவோமாகில், சுதந்திரத்தை நிலவச் செய்யவும், கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியத்தை முறியடிக்கவு பேருதவி செய்தவர்களாவோம்.

மார்ஷல் திட்டப்படி மூன்ருவது ஆண்டு திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் முறையில், 3,121 450,000 டாலர் அளிக்கும் மசோதாவில் கையொப்பமிட்டு, அது பற்றி ... அமெரிக்க த... ...ழர் ட்ருமன் வெளி...ள்ள கருத்துக்களே மேலே தரப்பட்டுள்ளவை.

இந்த மசோதாவை வெளியிட்டபோது "உலக அமைதிக்கு, சுதந்திரத்துக்கும் உதவக்கூடிய மிகப் பெரிய உதவித் திட்டம் இதுவே" என்றும் அவர் கூறியுள்ளார்.

உலகில் எங்கும் பரவி காணப்படும் வறுமை, வாட்டம், வேலையின்மை இன்ன பிற இன்னல்களை ஒழிக்கப் போவதாகக் கருதிக்கொண்டு, அல்லது உலக மக்களைக் கருதும்படி செய்யத் தயாரிக்கப்பட்டதே மார்ஷல் திட்டம். மார்ஷல் திட்டத்தின் நோக்கம் மாநிலத்தின் வாட்டத்தை தீர்ப்பதே என்று பறை சாற்றப்பட்டு வந்தபோதிலும், உண்மையில் அத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் உலகில் அதிவேகமாகப் பரவிவரும் பொதுவுடைமைக் கொள்கையைப் பொசுக்கச் செய்வதேயாகும் என்பது உலகறிந்த விஷயம்.

இத்தகைய விசித்திர திட்டம் கடந்த இரண்டாண்டுகளாக வேலை செய்து வருகிறது. மூன்ரும் ஆண்டுக்கும் திட்டம் தீட்டப்பட்டு, முன்னிலும் பன்மடங்கு டாலர் தானம் செய்ய முன்வந்துள்ளது அமெரிக்க முதலாளித்வம்.

இதுநாறும் கோடிக்கணக்கில் செலவழிக்கப்பட்ட டாலர்களால், உலகம் உருப்படியாகக் கண்ட பலன்தான் என்ன என்பது தெரியவில்லை அமெரிக்காவின் டாலர் உதவி ரஷியாவுக்கு எதிராகப் பல நாடுகளில் விஷம பிரசாரம் நடைபெறவும், பகைமை உணர்ச்சி வளரவும், போருக்குத் தயாராகும்படி பல நாடுகளைத் தாண்டவும்தான் பயன்பட்டதேயன்றி அடிக்கடி ட்ருமன் குழுவினர் கூறுவதுபோல முன்னேருத நாடுகள் முன்னேறவோ, வறுமையும், வாட்டமும் அகலவோ வழியேற்பட்டதாகத் தெரியவில்லை.

இங்கிலையிலே தான், முன்னேற்றமடையாத நாடுகளைக் குறித்து முதலைக்கண்ணீர் வடிக்கிருர் தோழர் ட்ருமன்! வறுமை, வாட்டம், அறியாமை இன்ன பிறவற்றைச் சிறுகச் சிறுக விலக்கப்போகிருர்களாம், உல்லாச உலகிலே சஞ்சரிக்கும் இந்த உத்தமர்கள்! அதே சமயத்தில் கம்யூனிஸ ஏகாதிபத்யத்தையும முறியடிக்கப்போகிருர்களாம்.

"மாநிலத்து மக்களின் பிணிகளையெல்லாம் போக்கிவிடப் போகிருேம், ஆனால் அதே சமயத்தில் மருத்துவர்களையெல்லாம் ஒழித்துக்கட்டவும் உத்தேசித்துள்ளோம்" என்று கூறுவதுபோலவேயிருக்கிறது அந்தப் பல உலக அதிபதியின் பேச்சு.

வறுமை, நோய், அறியாமை முதலியனவற்றை

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

லண்டனில் புத்தர் ஆலயம்

கொழும்பு, ஜூன் 4—

லண்டனில், விரைவில் ஒரு பௌத்தர் கோயில் கட்டப்படுமென்று தெரிகிறது.

லண்டன் விஹார சங்கத்தின் உப தலைவர், மேஜர் ஜனரல் டன்ஹலாஅவுஸ்; இங்கு உலக பௌத்தர் மாநாட்டில் பேசுகையில், இதற்காகத் திட்டங்கள் தீட்டப்படுவதாக அறிவித்தார்.

லண்டனில் கோயில் கட்ட இடம் பெறுவதற்கு லண்டன் சர்க்காரை, இலங்கைப் பிரதமர் தோழர் சேனநாயகா கேட்பாரென்று அவர் அறிவித்தார்.

மாநாட்டுக்கு வந்துள்ள மற்றப் பிரதிநிதிகளும், இதற்காக முயற்சித்தால் வேலை எளிதில் முடியுமென்று அவர் அறிவித்தார்.

கீழ்நாடுகளில் அமெரிக்காவின் துரோகச் செயல்கள்

நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன

ஜப்பான் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடைசெய்ய முயற்சி

டோகியோ, ஜூன் 5—

ஜப்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்துவிட ஜப்பான் சர்க்கார் யோசித்து வருவதாகத் தெரிவதால், ஒரு பொது வேலை நிறுத்தம்செய்ய வேண்டுமென்று ஜப்பான் கம்யூனிஸ்டுக் கட்சி இன்று அறிவித்துள்ளது.

பொது மக்களின் ஆதரவைத்திரட்டி கடைசிவரையில் போராடப் போவதாகக் கம்யூனிஸ்டுகள் அறிவித்தார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சியை இந்த நேரத்தில் தடை செய்வது, அவ்வளவு 'சிறந்ததாகாதென்று' சோஷலிஸ்டு ஜனநாயகக் கட்சிகூட அறிவித்துள்ளது.

ஜப்பானிய அட்வகேட் ஜனரல் தோழர் ஷூன்குசி-யுவேடா சமீபத்தில், கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்துவிட, வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றனவென்று அறிவித்தார்.

சர்க்கார் கொள்கையை விளக்கும் வகையில், தான் கூறவில்லையென்றும், எந்தத் துறையில் சர்க்கார் யோசித்து வருகிருர்கள் என்பதைத்தான் கூறியதாகவும் அவர் அறிவித்தார்.

எதிர்பார்த்ததைவிட சீக்கிரமாகவே கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்துவிடப்படுமென்று, சர்க்கார் முதல் காரியதரிசி அறிவித்துள்ளார். சில நாட்களில் ஜப்பான் மந்திரி சபை இதுபற்றி ஆராயுமென்றும், மக்கார்தர் அவர்கள், எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைக்கு அனுமதியளிப்பாரென்றும் அவர் அறிவித்தார்.

இதையொட்டித்தான் ஒரு பெரிய பொதுவேலை நிறுத்தம் செய்வதென்று, கம்யூனிஸ்டுக் கட்சி முடிவு செய்துள்ளது ஜப்பானிய ரயில்வே துறைமுகங்கள், மற்றும் நாட்டின் முக்கிய தொழில்களில் வேலைசெய்வர்களிடையே கம்யூனிஸ்டுக் கட்சி பலத்த ஆதரவு பெற்றுள்ளது.

இரண்யன் சுட்டுக்கொல்லப்பட்டார்

பட்டுக்கோட்டையில் "நரசிம்ம" ராஜ்யம்!

பட்டுக்கோட்டை, ஜூ 8—

வட்டக்குடி இரண்யன், அம்பலப்பட்டு முருகையன் என்னும் இரண்டு முக்கிய கம்யூனிஸ்டுகள், எஸ். ஏ. பி. படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

இவர்களைப் பல நாட்களாக போலீசார் தேடிவந்தார்களாம். சவங்கள் பட்டுக்கோட்டை ஆஸ்பத்திரிக்கு, சவப்பரிசோதனைக்காகக் கொண்டுவரப்பட்டது.

பீகார் எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் செல்லுபடியாகாதாம்

—(0)—

ஜமீன்தாரருக்குச் சாதகமாக பாட்னா நீதிமன்றத் தீர்ப்பு

—(...)—

ஆள்வோர் திறமையை அவர்கள் அறிந்துகொண்டார்கள்!

பீகார் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் (1949) செல்லுபடியாகாதென்று, பாட்னா உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி தோழர்கள் ஷியார், தாஸ், சின்ஹா ஆகியவர்களாவார்கள்.

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னும் பின்னும், இச்சட்டம் செலலுபடியாகாதென்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்தியக் குடியரசுத் தலைவர் கையொப்பமிருந்தும், இச் சட்டம் செல்லுபடியாகாதென்று நீதிபதிகள் அறிவித்துவிட்டார்கள்!

ஓராண்டுக்குமுன் கொண்டுவரப்பட்ட பீகார் எஸ்டேட் ஒழிப்புச்சட்டத்தின்படி ஜமீன்களை எடுத்து நிர்வகிக்கும் அதிகாரம், பீகார் அரசாங்கம் பெற்றிருந்தது. அதன் விளைவாக 50000 ரூபாய்க்கு மேல் வருட வருமானமுள்ள 50 எஸ்டேட்டுகள் தற்போது பீகார் சர்க்கார் நிர்வகிக்கப்படுகின்றன.

இந்தச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தற்குக் காரணம், உழவர்களை ஜமீன்தார்களின் தொல்லைகளிலிருந்து விடுவிக்கவும், விவசாயிகள் நிலங்களைச் சரிவரப் பயிர்செய்ய அவர்களுக்குக் கடன் உதவிதரவுமாகுமென்று சர்க்கார் அறிவித்திருந்தது.

பீகார் எஸ்டேட் சட்டம் சட்ட விரோதமானதென்றும், சர்க்கார் எஸ்டேட்டுகளை எடுத்துக்கொள்வதைத் தடுக்க வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கும்படி ஒரு ஜமீன்தார் உயர்நீதிமன்றத்துக்கு செய்துகொண்ட பிரயாணதை விசாரித்து, இத் தீர்ப்பளிக்கப்பட்டது.

* * *

அனுபவமில்லா தலைவர்கள்

(2-ம்பக்கம் பார்க்க)

மாலை மணி

சென்னை 7—6—50 புதன்கிழமை

வீரமா? வேடிக்கையா?

நரியே! நீ உன் நயவஞ்சகத்தை விட்டுவிடு!

* * *

பாம்பே! நீ உன் விஷப் பற்களைக் கக்கிவிடு!

* * *

குரங்கே! நீ உன் கோணல் சேட்டைகளைப் போக்கிவிடு!

* * *

என்று எவரேனும் நரியையும், பாம்பையும்; குரங்கையும் கேட்டால், அவரைப்பற்றித் தெளிவறிவுடையோர் என்ன கருதுவார்கள்? யாரோ பைத்தியக்காரன். ஆகாத செயல் பற்றி என்ன என்னவோ உளறிக் கொட்டுகிறான், என்றுதான் கருதுவார்கள்.

நயவஞ்சகத்தை விடும்படி நரியையும், படு விஷத்தைக் கக்கும்படி பாம்பையும், கோணல் சேட்டைகளை நீக்கும்படி குரங்கையும் கேட்டுக் கொள்பவனைப் போல, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர், பதவி ஆசையை விடும்படி காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக்கொள்கிறார்! என்ன விசித்திரம்!

நரிக்கும்—நயவஞ்சகத்துக்கும், பாம்புக்கும்-படுவிஷத்திற்கும், குரங்குக்கும்கோணல் சேட்டைகளுக்கும் எவ்வளவு தொடர்பு உண்டோ, அவ்வளவுதொடர்பு, காங்கிரஸ்காரர்களுக்கும் பதவி ஆசைக்கும் இருக்கிறது. அந்தத்தொடர்பு அற்றுவிடவேண்டும என்று தோழர் காமராஜர் கூறுகிறாரென்றால், இயற்கையியல்பை மாற்ற அவர்துணிவுகொள்கிறார் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது பதவி ஆசையின் முழு இருப்பிடமே காங்கிரஸ்தான், காங்கிரஸே பதவி ஆசை, பதவி ஆசையே காங்கிரஸ் என்ற நிலை ஏற்பட்டுவிட்டபிறகு, காங்கிரஸிலிருந்து பதவி ஆசையை அன்பர் காமராஜர் எப்படிப் பிரித்தெடுக்கப்போகிறாரோ தெரியவில்லை! பரிதாபம்! நரியினின்றும் நயவஞ்சகத்தைப் பிரிக்க முற்படுபவன் நிலைக்குத் தானே கொண்டு செல்லப்படுகிறார், தோழர் காமராஜர்!

தோழர் காமராஜர் அத்துடனில்லாமல். மேலும் பரிதாபத்திற்குரிய நிலையில தனைத் தானே கொண்டுவந்து நிறுத்திக்கொள்கிறார் நரியினிடத்திருந்து நயவஞ்சகத் தன்மை போகவேண்டும என்று, நயவஞ்சக நரியொன்றே கூறுமானால், அந்தச் செயல் எவ்வளவு விசித்திரம் வாய்ந்ததாகக் கொள்ளப்படுமோ, அவ்வளவு விசித்திரம் அடங்கியிருக்கிறது, தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் தோழர் காமராஜர், "**காங்கிரஸ்காரர்கள் பதவியின்மீது ஆசைப்படவே கூடாது**" என்று கூறுவதில்!

இத்தகைய விசித்திரமான, ஆனால் வேடிக்கையானமொழிகள். தோழர் காமராஜரின் வாயினின்றும் எங்கு சிதறின என்றால், வேறு எங்குமில்லை, சிதம்பரத்தில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில்தான்.

'காங்கிரஸ்காரர்கள் பதவியின்மீது ஆசைப்படவே கூடாது. சட்டசபை அங்கத்தினர் பதவியிருந்தால்தான் கௌரவம், மரியாதை உயரும் என்று எண்ணுவது தவறு. வெளியில் இருந்து சேவை செய்தால்தான் கௌரவம் உயரும்"

என்பது அன்பர் காமராஜர் அருளிய 'திருவாய்மொழி'! இந்தத் திருவாய்மொழியைக் கேட்டு நடக்கும் காங்கிரஸ்காரர்கள் எத்தனைபேர் இந்தக் காலத்தில் இருக்கிறார்கள்? தோழர் காமராஜராலேயே அந்தப்படி நடக்க முடியாதபோது, மற்றவர்களால் எப்படி நடந்து காட்டமுடியும்? சென்றநான்கு ஆண்டுக் காலத்தில் ஒரு தடவையேனும், ஏதேனும் ஒரு மசோதாபற்றிக்கூட தம் கருத்தை எடுத்துக்கூற முடியாத தோழர் காமராஜர். இன்னமும் சென்னை சட்டசபை அங்கத்தினர் பதவியில் வீற்றிருக்க ஆசைதானேபடுகிறார்! பதவி ஆசை அவரைவிடவில்லை! தன்னால் பணிஆற்ற முடியவில்லை என்ற நிலையிலும் பதவி ஆசை அவரை விடவில்லையே! ஆசை வெட்கமறியாது என்பார்களே; அந்தப்படி ஆசைக்கு அடிமைப் பட்டுவிட்டார் போலும் அன்பர் காமராஜர்!

தோழர் காமராஜர் 'திருவாய்மொழி' பகர்வது மட்டுமல்லாமல், வீரமும் பேசி நிற்கிறார்! பண ஆதிக்கத்தை முதலாகக்கொண்டவர்கள் காங்கிரஸில் பதவிபெற உள்ளே நுழைகிறார்களாம், அப்படிப் பட்டவரை மாகாணக் கமிட்டி மெம்பர் ஜாபிதாவிலிருந்து நீக்கிவிடுவாராம்! **"சண்டை போடுவது என முடிவு செய்து விட்டால் கடைசிவரையில் விடாமல் போட்டுப்பார்த்து விடுவேன். நான் உயிருடன் இருக்கும் வரையில் இப்படிப் பட்டப் பணக்காரர்களின் ஆதிக்கம் காங்கிரஸில் புக இடங்கொடுக்கமாட்டேன்"** என்று கூறுகிறார்

இப்பொழுது என்னவோ காங்கிரஸில் பணக்காரர் ஆதிக்கம் இல்லாதது போலவும், இனிமேல் அத்தகைய ஆதிக்கம் புக இடமளிக்கமாட்டேன் என்றும் வீரம் பேசுகிறார் காமராஜர்! தான் உயிருடன் இருக்கும் வரையில் அது நடைபெறாது என்றும் வீராப்பு பேசுகிறார்! தான்பேசுவது வீரமொழி என்றுதான் அன்பர் காமராஜர் கருதிக்கொண்டிருக்கிறார், ஆனால் அது மக்கள் கண்முன்னால் வேடிக்கையாகத்தான் காட்சியளிக்கிறது. காங்கிரஸ், தலை முதல் வால் வரையில் பண மூட்டைகளின் சேர்க்கையாலும், பண ஆதிக்கத்தாலுந்தான் அசைகிறது என்பதை நாடு நன்கு அறியும். அப்படிப்பட்ட உண்மையை மறைக்கப் பார்க்கிறார் தோழர் காமராஜர்முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைக்க முயலுவதைப் போல. பண மூட்டைகள் அத்துணையுந்தான் காங்கிரஸ் வீட்டில் குடியேறிவிட்டனவே, அதற்குப் பிறகும் தோழர்காமராஜர் பாசாங்கு புரிவதேன்? வேசப்புக் காட்டுவதேன்? மக்கள் இன்னமும் ஏமாற மாட்டார்களா என்று எதிர்பார்ப்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

காங்கிரஸில் பண ஆதிக்கங் கொண்டவர்களும், பட்டம் பதவியில் ஆசையுள்ளவர்களுமே ஏராளமாக இருந்து வருகிறார்கள் என்பதைத் தோழர் காமராஜர் கூற்றே நன்கு விளக்கிக் காட்டுமே!

'பல பேர் புதிதாய்க் காங்கிரஸுக்கு வருகிறார்கள். காங்கிரஸில் ஏதாவதொரு ஸ்தாபனத்தில் இருக்க ஆசைப்படுகிறார்கள். புதிய ஆட்கள் வர வேண்டியதுதான், வர வேண்டாம் எனச் சொல்லவில்லை ஆனால் பலர் வருகிற நோக்கம் வேறு. சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையுடன் அவர்கள் வரவில்லை" என்பது தோழர்காமராஜரின் கூற்று.புதிதாய் வந்து சேருகிற பலருக்கு வருகிற நோக்கம் வேறு என்று கூறுகிறார். பலர் என்று கூறுவதைவிட புதிதாய்வந்து சேருகிற எல்லோருக்கும் வருகிற நோக்கம் வேறு என்று கொள்வதுதான் பொருத்தமானதாகும்; அதுதான் உண்மையுங்கூட! சேவை செய்ய வேண்டும் என்ற ஆசையுடன், வெளியிலிருந்து வருபவர்கள் வரவில்லை என்று கூறுகிறார். சேவை யுணர்ச்சியுள்ளவர்கள் காங்கிரஸுக்குள்ளே யிருந்து வெளியேறுவார்களே யல்லாமல் உள்ளே எப்படி வருவார்கள்? சேவை உணர்ச்சியுள்ளவர்கள் எப்படி உள்ளே வர முடியும்? காங்கிரஸில், பதவி ஆசைக்கு இடமிருக்கிறதேயல்லாமல், சேவை உணர்ச்சிக்கு எங்கிருக்கிறது இடம்? ஆகவேதான் பதவி ஆசை கொண்ட பணக்காரர்கள் உள்ளே நுழைகிறார்கள்;தியாக சிந்தையும், பொதுநோக்கமும் கொண்ட சேவை செய்வோர் வெளியேறுகிறார்கள் இந்த நிகழ்ச்சி அன்றாடம்செவ்வனே நிகழ்ந்துகொண்டிருக்கும் போது, தோழர் காமராஜரின் 'வீரமொழிக்கு' அர்த்தம் ஏதேனும் இருக்கமுடியுமா? அவர் மொழி வீரத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கவில்லை; வேடிக்கைக்கு ஏதுவாகத்தானிருந்து வருகிறது!

தோழர் காமராஜரின் கூற்றுக்களை ஆராய்ந்து பார்த்தால், அவரே நாளுக்கு நாள் வேடிக்கைப் பொருளாகத்தான் மாறிவருகிறார். ஆகவேதான் அரசியல் வான வேடிக்கையை அவர்அடிக்கடி நடத்தி வருகிறார் போலும்! இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த வேடிக்கை, அரசியல் உலகில் வேடிக்கையாகவே இருக்குமோ தெரியவில்லை!

விண்ணுலகைக் காட்டி மண்ணுலக மக்களை ஏமாற்றவில்லை

புத்தர் போதனைபற்றி தோழர் நல்லையா சொற்பொழிவு

மட்டக்களப்பு (இலங்கை) ஜூன் 5—

இங்கு நடந்த போசன் விழாவில், பௌத்த மதத்தைப் பற்றித் தோழர் நல்லையா பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

இன்று உலகில் இரு பெரும் இயக்கங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் ஒன்று,ரஷ்யாவின் தலைமையில் நடைபெறும் கம்யூனிஸம். மற்றது அமெரிக்கஜனநாயகம். இவை இரண்டும் ஆசிய நாட்டு மக்களின் பண்பாட்டிற்கு ஒத்தனவல்ல. இதனால் தான், இன்று பௌத்த மதத்தில் இவ்வளவு கவனஞ் செலுத்தப்படுகின்றது. இம் மதத்தின் உண்மையை அறிய, இன்று நம் நாட்டிற்கு அம்பேத்கார் போன்றவர்கள் வந்திருக்கின்றார்கள்.

பிரபல சரித்திராசிரியரான எச் ஜீ. வெல்ஸ், தமது சரித்திரத்திலே அசோக மன்னனின் ஆட்சியை மிகப் புகழ்ந்துள்ளார்.இம் மன்னன் காலத்தில்தான் இம் மதம் உலகெங்கும் பரவியது. புத்த பகவான் கடவுளைப்பற்றிப் பேசவில்லை ஒருவன் தனது வாழ்க்கையைச் செம்மையாக நடத்த வேண்டிய அவசியத்தையே வற்புறுத்தினார். இங்ஙனம், செம்மையான வாழ்க்கையை நடத்துவதன் மூலம் இம மண்ணுலகத்தையே 'தேவலோகம்' ஆக்கலாம் என்பது புத்தரின் கருத்து. ஆனால், இலங்கையில் நடப்பவைகள் பௌத்தமதத்திற்குமுற்றிலும் ஒவ்வாதவைகளாக இருக்கின்றன. ஒருமுட்டையை தானும் உடைக்கவிரும்பாத புத்த சமயி, தனது அயலவன்மீது கத்தியைப்பாய்ச்ச பின்னிற்பதில்லை. நம்நாடு புத்த தத்துவங்களை வாழ்க்கையில் கையாளுவதின் மூலம், நம்நாடு முன்னேறுவது மட்டுமல்ல,அகில உலகையுமே முன்னேற்ற வழி காட்டலாம். ஆனால் நாம கடந்த 2500 ஆண்டுகளாக இம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் எனப் பெருமையடிப்பதால் மட்டும்,இதுநிறைவேறிவிடாது என்றுகூறி முடித்தார்

மத்திய கிழக்குப் பாதுகாப்பு பிரச்சினைகள்

சிலிம் பேச்சு

கெய்ரோ, ஜூன். 6—

பிரிட்டிஷ் சேனாதிபதி சிலிம், எகிப்திய மந்திரிகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்

மத்திய கிழக்கு பாதுகாப்பு பிரச்னைகள் குறித்து. விவாதிக்கப்பட்டதாகத்தெரிகிறது. சிலிம்புறப்படுமுன், அவருக்கு எகிப்திய மந்திரிகள் விருந்தளிப்பர்.

சூயஸ் கால்வாயைப் பற்றி குறிப்பாகப்பேசப்பட்டதாகத் தெரியவில்லை.

பீகார் எஸ்டேட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாளவந்தவர்கள் என்று, பன்முறை எடுத்துக் கூறியுள்ளோம். முதலாளிகளின் தாசர்களாகவே சர்க்கார் நடத்தி வந்துள்ளார்கள் என்றாலும். தேர்தல் பிரசாரத்தில் தொண்டைக்கிழியக் கத்தியவைகளில் ஒன்றிரண்டையாவது செய்து காட்டி, மக்கள் கண்ணில் மண் தூவாவிட்டால், அடுத்த தேர்தலில் ஓட்டுப் போடமாட்டார்கள் என்று பயந்து கொண்டுவந்த சீர்திருத்தச் சட்டங்களில் ஒன்று தான், ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம். இதுபோன்ற சட்டங்களை அமுல் நடத்துவதற்கு முன்பு இருட்டறையாகிய சட்டத்தை ஆராய்ந்து, புதிய சட்டத்துக்குப் பாதகமாக உள்ளவைகளைக் களைய வேண்டும். இன்றேல், இது போன்ற சட்டங்கள் அமுல் நடத்துவதால்; பெரு நஷ்டமடையும் பணக்காரகும்பல், வக்கீலின் வாதமாகிய விளக்கைக் கொண்டு ஆராய்ந்து, இவைகளைச் செல்லுபடியாகாதவைகளாக்கப் பெருமுயற்சி செய்வார்கள். [illegible] படிச் செய்ததினால் [illegible] வெற்றிதான்,பீகார் எஸ்[illegible] ஒழிப்புச் சட்டம் செல்லுபடியாகாதென்று கிடைத்த தீர்ப்பு.

சர்க்கார் உடனே இது போன்ற சிக்கல்களைச் சீர்தூக்கிப் பார்த்து; அவை செய்யாவிட்டால் மக்கள் வாட்டமுறுவதுடன், கையாலாகாத சர்க்கார் என்று நம் நாட்டவர் மட்டுமல்லாமல், அயல்நாட்டினரும் கூறத் தயக்கம்கொள்ள மாட்டார்கள்.

டாலருக்கு ஆஸ்திரேலியாசரணாகதி

கடன்பெற மென்ஜிஸ் அமெரிக்கா செல்வார்

லண்டன், ஜூன். 6—

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மென்ஜிஸ்; இப்பொழுது நடைபெறும் பார்லிமெண்ட் செஷன் முடிந்ததும், அமெரிக்காவுக்கு விஜயம செய்வார் எனத் தெரிகிறது. என்று 'குளோப்' நிருபர் அறிவிக்கிறார்.

ஒரு பெரிய டாலர் கடன் தொகையை எழுப்புவதற்காகவே, இவர் அமெரிக்கா செல்லவிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

தென்மேற்கு பஸிபிக பாதுகாப்பு விஷயமாக, தோழர் மென்ஸிஸ் பிரிட்டனுக்கும் செல்வார் என்று தெரிகிறது.

இலங்கை ராணுவத்தில் சேர பயிற்சி

கொழும்பு, ஜூன் 6—

இலங்கை ராணுவததில் சேருவதற்காக பயிற்சியளிக்கப்பட்ட முதல் குழுவினர் சென்ற வாரம் பயிற்சி முடிந்து ராணுவத்தில் சேர்க்கப்பட்டனர்.

கழகத்திற்குக் கட்டிடம்-ஆக்க வேலைக்கு அடிப்படை

கழகத் தோழர்களே!

ஆர்வத்தை அன்பளிப்புமூலம் காட்டுங்கள்

முதல் ஹெலிகாப்டர் போக்குவரத்து

லிவர்பூல், ஜூன் 6—

உலகிலேயே முதல் முதலாக ஹெலிகாப்டர் சர்விஸ் லிவர்பூலுக்கும், தென்வேல்ஸிலுள்ள கார்டிப்புக்குமிடையே ஆரம்பமாகிவிட்டது.

ஹெலிகாப்டர்கள் ஒரு சரியான போக்குவரத்து சாதனமாவதற்கு குறைந்தது 7 அல்லது 8 வருஷங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெருசலம் விமான நிலையம்

அம்மான், ஜூன் 6—

கலாண்டியா விமான நிலையம் இனி ஜெருசலம் விமான நிலையம் என்றழைக்கப்படும் என்று உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. —ரூனேப்

[illegible]னுக்கு இலங்கை தேயிலை

கொழும்பு, ஜூன் 6—

[illegible]பிரிட்டனுக்குத் தேவையாகவுள்ள மொத்த அளவு தேயிலையையும் இலங்கை சப்ளை செய்ய முன்வரா விட்டால், இலங்கைத் தேயிலையை குறைத்துவாங்க பிரிட்டிஷார் முடிக்கப்பட்டுவிடுவார்கள் என்று இலங்கைத் தேயிலை கமிஷனருக்கு, பிரிட்டிஷ் உணவு இலாகாவுக்கு ஏஜெண்டாக இருப்பவருமான அதிகாரி இலங்கையை எச்சரித்திருக்கிறார்.

பிரிட்டனுக்கு 11 கோடிபவுண்ட் தேயிலை இவ்வாண்டு தேவையாயிருக்கிறது.

84 வயது கிழவன் நடக்கும் பந்தயத்தில் வெற்றி!

லண்டன், ஜூன் 6—

விண்ட்ஸாரிலிருந்து, டிவிஜுகன் ஹாம்வரை உள்ள பதினைந்தே முக்கால் மைல் தூரத்தை, 84 வயதுள்ள சார்லஸ்ஹார்ட் என்பவர் 4 மணி நேரத்தில் கடந்து 10 கினி பரிசைப் பெற்றிருக்கிறார்.

ஆதிவாசிகள் முன்னேற்றம்

மத்திய சர்க்கார் இலாகா ஏற்படுத்தும்படி கோரிக்கை

சாம்பல்பூர், ஜூன் 5—

'ஆதிவாசிகள்' முன்னேற்றத்தைக் கவனிக்க 'ஆதிவாசி' ஒருவரைத் தலைவராகக்கொண்ட ஒரு இலாகாவை, ஒரிஸா சர்க்காரைப் போன்று மத்திய சர்க்காரும் ஏற்படுத்த வேண்டுமென்று இங்கு நடந்த ஜில்லா ஆதிவாசிகள் மாநாட்டில் வற்புறுத்தப்பட்டது.

மாநாட்டுக்கு ஒரிஸா கிராம அபிவிருத்தி மந்திரி தோழர் பாரிஹா தலைமை தாங்கினார். ஒரிஸா முதல் மந்திரி தோழர் நாபகிருஷ்ண சௌத்திரியும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கு ஸ்டிரொப்டோ மிஷின்

கொழும்பு, ஜூன் 6—

இலங்கைக்கு அடுத்த வருஷம் தேவையாக உள்ள ஸ்டிரெப்டோ மிஷின் முழுவதையும், சப்ளை செய்யத் தயார் என்று, ஒரு அமெரிக்க கம்பெனி முன்வந்திருக்கிறது. இதற்கான பணத்தை அடுத்த பட்ஜெட்டில் ஒதுக்கி வைப்பதில் பொறுத்திருந்து, பின்னர் வாங்கிக் கொள்வதாக அக்கம்பெனியார் தெரிவித்திருக்கிறார்களாம்.

டூரிஸ்டுகளுக்கு வரவேற்பு

கொழும்பு, ஜூன் 6—

இலங்கைக்கு டூரிஸ்டுகளை அதிகமாக வரச்செய்ய இந்தியாவிலும், ஆஸ்திரேலிய விலும் இலங்கையில் பார்த்தாக வேண்டிய இடங்களைப் பற்றி விளம்பரம் செய்ய, இலங்கை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்.

இதற்காக ஒரு குறிப்பிட்டத் தொகை பட்ஜெட்டில் ஒதுக்கப்படும்.

பெல்ஜிய பொதுத்தேர்தல்

லண்டன், ஜூன். 6—

பெல்ஜியம் பொதுத் தேர்தலில் உத்ஸாகம் எதுவும் காணப்படவில்லை, என்று கூறப்படுகிறது. இத்தனைக்கும் தேர்தல் பிரச்னையாக லியோபால்ட் மன்னர் பதவிக்கு வருவதா, வேண்டாமா என்ற விஷயம் இருந்துவருகிறது இததடவை அநேகமாக கத்தோலிகக் கட்சியே மெஜாரிட்டியைப் பெறும் எனத் தெரிகிறது.

தெ. ஆ. பிரச்னைபற்றி 'எக்னமிஸ்டு' கருத்து

லண்டன், ஜூன் 6—

"மலான் செய்ய உத்தேசித்திருப்பதுதான் என்ன? கருப்பர்களை ஒதுக்கிவெளியேற்றப் போகிறாரா அல்லது ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு, நிர் மூலமாக்கும் நிலைமைக்குக்கொண்டுவரப் போகிறாரா?" என்று 'எகனமிஸ்டு பத்திரிகை, இனவடார மசோதாபற்றி எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

தென்னாப்பிரிக்காவின் பிரச்சினையைத் தீர்க்க நிறவெறி கொள்கையோ அல்லது கருப்பர்களை ஒதுக்கி வெளியேற்றுவதோ, தக்க பரிகாரமாகாது என்று அப்பத்திரிகை கூறுகிறது.

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாடு

சோழவந்தான் புகைவண்டி நிலையத்துக்கு அருகில் மாநாட்டுப் பந்தல் அமைக்கப்படுகிறது. அதன் வேலைகள் இப்போதே துவக்கப்பட்டு, துரிதமாக நடைபெற்றுவருகின்றன. மிக அழகியமுறையில், வசதியான ஏற்பாடுகளுடன் "செல்வம் பந்தலை" அமைக்கவும், மேடை அமைக்கவும் மிகவும் கவனம் செலுத்தப்படுகிறது. நல்லமுறையில் மின்சார விளக்குகளை அலங்காரம் செய்யவும் முயற்சிகள் செய்யப்படுகிறது. மதுரை மாவட்டத்திலிருந்தும், சுற்றுப்புற மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து, மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று நம்புவதற்கான சூழ்நிலை காணப்படுகிறது. எனவே, மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளை உபசரித்துத் தக்க முறையில் வசதிகள் செய்வதற்கு, வரவேற்புக் குழுவினர் தீவிர முயற்சி எடுத்துவருகின்றனர்.

மதுரைமாவட்டத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்கள் ஆங்காங்கு, தங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள டிக்கட்டுகளை விரைவில் விற்பனை செய்து, முன்கூட்டியே பணத்தை அனுப்பிவைத்து உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முன்கூட்டியே மாநாட்டு டிக்கட்டுகள் வாங்க விரும்பும் தோழர்கள், மதுரை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு முக்கிய ஊர்களிலும் உள்ள தி. மு. கழக நிர்வாகிகளிடம் பெற்றுக் கொள்ளலாம். மதுரை நகரிலும், திண்டுக்கல்லிலும் கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட்டுகள்கிடைக்கும்:

1. எஸ். முருகன், பெயிண்ட் வியாபாரம், திண்டுக்கல்ரோடு, மதுரை.
2. கிருஷ்ணசாமி, வெற்றிலைபாக்குக் கடை, வெங்கலக்கடைத் தெரு, மதுரை.
3. எம். வி. மணி, பழைய பாத்திரக் கடை தெற்குவாசல், மதுரை.
4. ல. ஷ. கிருஷ்ணன், ஷாப். சந்தைப்பேட்டை, மதுரை.
5. கோ. லெட்சுமணன், தரகு மண்டி. திண்டுக்கல்.
6. எம். சோணாசலம், பொரி, கடலை வியாபாரம், மேற்கு ரத வீதி, திண்டுக்கல்

மலேயா தொழிற்சங்கம் பலப்பட்டுவருகிறதாம்

லண்டன், ஜூன் 6—

கம்யூனிஸ்டுகளை எதிர்த்து வரும் மலேயா தொழிற் சங்கத்தின் பலம், பெருகிவருகிறதென இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. இதுவரை 169 பதிவு செய்யப்பட்ட யூனியன்கள், இச்சங்கத்தில்சேர்ந்திருக்கின்றன. இப்பொழுது சேர்ந்திருப்பதில், மெஜாரிட்டி இந்தியர் சங்கந்தான். மலேயா தொழிற்சங்கம் சர்வதேச சுதந்திர தொழிற் சங்கத்தில் சேர்ந்துள்ள ஸ்தாபனமாகும்.

அமெரிக்க சர்க்கார் தலைமைக் காரியாலயம்



வசதியிருந்தால் ஒரு நாடு எவ்வளவு வேகமாக முன்னேறக்கூடுமென்பதற்கு அமெரிக்கா ஒரு எடுத்துக் காட்டு. நானூறு ஆண்டுகளுக்கு முன், அதாவது இந்தியா, சீனா, எகிப்து, கிரேக்க நாடுகளின் நாகரீகம் உச்ச நிலையில் இருந்தபோது, அமெரிக்காவில் அடர்ந்தகாடுகளும் இன்று சிகப்பு இந்தியர் என்றழைக்கப்படும் காட்டுமிராண்டிகளும்தான் இருந்தார்கள். ஆனால், இன்று அமெரிக்கா உலகத்தையே ஆட்டிப்படைக்கிறது சர்வவல்லமையும் பெற்றுள்ள அமெரிக்க சர்க்கார் காரியாலயம் தான் படத்தில் காண்பது. இது வாஷிங்டனில் உள்ளது. கட்டி 150 ஆண்டுகள்தான் ஆகின்றன.

டாலர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகைவிட்டே ஒழிப்பதென்றால், அது எளிதில் ஆகக்கூடிய பணியன்று. தனிப்பட்ட ஒரு சிலரின் முயற்சியால் மட்டுமே நிறைவேறக்கூடியதுமன்று. உலக வறுமையும், வாட்டமும் சில கோடிக்கணக்கான டாலர்களால் நீக்கக்கூடியநோய்களல்ல. இவை கடுமையான நோய்; இரண சிகிச்சை செய்து குணப்படுத்தப்பட வேண்டியவை. இந்நோய்கள் தீரவேண்டுமானால், நோய் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வகையறிந்து பணியாற்றவேண்டும். இதற்கென உலகம் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு பொதுத் திட்டம் வகுக்கப்படவேண்டும். அத்திட்டத்திற்கு அடிப்படையாக உறுதியானதோர் கொள்கைவேண்டும். அதுதான் பொதுவுடமைக் கொள்கை.

இத்தகையபொதுவுடமைக் கொள்கையோடு போட்டிப் போடும் முறையிலே, முதலாளித்வம் வகுக்கும் திட்டம் தான், மார்ஷல் திட்டம். பொதுவுடமைத் திட்டம் யானையின் ஆட்டம்; மார்ஷல் திட்டம் வான்கோழியின் ஆட்டம். முன்னதன் இனிமையும், ஏற்றமும் பின்னதில் காண முடியாது.

பிற்பட்ட நாடுகளுக்கு உதவி புரிய முன் வந்துள்ளார்களாம் இந்த உத்தமர்கள்! டாலரை லஞ்சமாக—இல்லை பிச்சை அளிப்பதுபோல அளித்து, அதன் மூலம் பிற நாடுகள் தம்முடைய தயவை எதிர்நோக்கி, கைகேந்தி நிற்கச் செய்வதுதான் உதவியா? இது ஒரு புறமிருக்கட்டும். உலகிற்கு உதவி அளிக்கிறோம் உதவி அளிக்கிறோம் என்று ஓயாது கூறும்—இவர்களைப் பார்த்து நீங்கள்யார் எங்களைக் காப்பாற்ற? எங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் திட்டம் எங்களிடம் உள்ளது. அத்திட்டம் வகையோடு வேலை செய்தால், வாழ்வுண்டு என்பது எங்களுக்குத் தெரியும். எனவே நீவிர் சற்று விலகியிரும்; எமது பணிக்கு இடையூறு செய்யாது, என்று கூறும் துணிவு உலக மக்களனைவருக்கும் தோன்றும் நாள் வரும் வரை இந்தத்தான்றோன்றித் தம்பிரான்களின் அட்டகாசமும், முதலாளித்துவ முறுக்கும் நீடித்துக்கொண்டேதானிருக்கும்.

மதுரை மா. தி. மு. க. முதல் மாநாடு

கட்டண விவரம்:

நாடகங்களுக்குக் கட்டணமில்லை.

பெண்களுக்கு மாநாட்டுக் கட்டணம் இல்லை.

உணவுக் கட்டணம் உண்டு.

மாநாட்டுக்கட்டணம்:-

வரவேற்பாளர் (உணவுடன்)	ரூ. 5
பிரதிநிதி	ரூ. 2
பார்வையாளர்	ரூ. 1

சனி இரவுஉணவும், ஞாயிறு காலைச் சிற்றுண்டியும் தனிச் சீட்டு ரூ. 1-0-0

ஞாயிறு பகல், இரவு இரு வேளை உணவுக்கும் தனிச் சீட்டு ரூ. 1-0-0

வரவேற்புக் குழுவினர்

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

கூடலூர் பழைய பட்டினம்

கூ. ப. பட்டினம், மே 27— 21-5-50 மாலை, சிணற்றப் மன்கோவிலுக்கெதிரிலுள்ள செல்வம் திடலில், தி. மு. க. சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கழகத் தோழர்கள் இருவர் இயக்கப் பாடல்கள் பாடினர். சக்கரபாணி திராவிடப் பண் இசைத்தபின், பெ. அ. இளங்கோ, கேட்டுக்கொள்ளதோழர் இரெ. இளம்வழுதி, எம். ஏ. பி. எல். தலைமை தாங்கி, கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பின்னர் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'தற்கால நிலை' என்பதுபற்றி 1½ மணி நேரம் பேசியபின், நன்றியறிதலுடன் கூட்டம் முடிவுற்றது.

நாரணபுரம்

நா. புரம், ஜூன் 5— சங்கரநயினர் கோவிலை அடுத்துள்ள இவ்வூரில் 1-6-50 மாலை, தி. மு. க. கிளையின் துவக்கவிழாப் பொதுக் கூட்டம், தோழர் சீ. சுந்தரராசன் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் தி. மு. கழகக்கொள்கைகளை விளக்கி, தோழர்கள் அ. அய்யப்பன், வே. இராசகோபாலன், அ. இராமானுசம் ஆகியோர் சொற்பெருக்கு ஆற்றினர் பிறகு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது, செயலாளர்கள்:— அ. அய்யப்பன், வே. இராசகோபாலன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— கு. இராமசுப்பு, சு சுப்பையா, அ. இராமானுசம், சீ. சுந்தரராசன், தலைவர் தமது முடிவுரையில், கழகம் அமைத்ததின் காரணத்தை விளக்கியபின் செயலாளர் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

கொண்டையம்பட்டி

கொ. பட்டி, ஜூன் 4— 23—5—50 மாலை தி. மு கழகத்தின் சார்பில் ஷியூர் பந்தடி மைதானத்தில், ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் ப. சுப்ரமணியன் தலைமை வகித்து நமது இயக்கத்தைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் விளக்கமாகப் பேசினர். அடுத்துத் தோழர் பெ. தனிக்கோடி சிறிது நேரம் பேசினர் தோழர்கள் அய்யாச்சாமி, முத்து ஆகியோர்பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் நம் இயக்கக்கொள்கையையும், அரசாங்கத்தின் ஆணவப் போக்கையும், திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தையும் பற்றி, சுமார் 2-30 மணிநேரம் விரிவாகப் பேசினர் தலைவர்முடிவுரைக்குபின் கூட்டம் இனிது முடிந்தது.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி, மே 31— 28-5-50 மாலை தோழர் பி. கே. பாலுசாமி அவர்கள் தலைமை வகிக்க, தோழர் பி. பலராமன், தி. மு. க. இரு வண்ணக்கொடியை ஏற்றுவிக்க, தி.மு.க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் ப. இலக்குவன் கொடி விளக்கமும், தி மு க. உண்டாகிய நிலைபற்றியும் மிக விரிவாகப் பேசினர். பிறகு தோழர் குமார தணிகாசலம் தி மு. க. என்றால் என்ன? நாங்கள் யார்? உண்மைக் கடவுட்டன்மையென்ன? வள்ளுவர் நாத்திகரா? என்று பல பொருள் குறித்து, ஆதாரத்துடன்விளக்கிப் பேசினர். பிறகு தோழர் என். வி. நடராசன் அவர்கள் பாமர மக்கள் நிலை, விவசாயிகள், பாட்டாளிகள் நிலை, தேசியவாதிகளின் போக்கு இவைபற்றிச் சுமார் 2 மணி நேரம் பேசினர். இறுதியாக தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் இலங்கை, பர்மா, இந்தோனேஷியா இவைகள் நிலைமையைக்கூறி, திராவிடம் பிரியவேண்டிய அவசியம் பற்றி விளக்கிக் கூறினர் தமிழைப்பற்றி இரண்டு மாணவர்கள் சிறிது நேரம் பேச, தலைவர் முடிவுரையுடன் இரவு 8 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

பால் கொடுக்கும் மரங்கள்

இந்தியாவில் வளர்க்கப்படும்

புதுடில்லி, ஜூன் 4— இந்நாட்டில் பால் கொடுக்கும் மரங்களை வளர்த்து பால் சப்ளை செய்வது பற்றி இந்திய விவசாய ஆராய்ச்சி கௌன்ஸில் ஆலோசித்து வருகிறது. மூன்று வருஷ பரிசோதனார்த்தமாக இத்திட்டம் நடைபெறும் என்றும் இதற்கான இடம் பம்பாயில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது. பால்கொடுக்கும் மரம் வெனிஸூலாவில் இருக்கிறதாம். நல்ல புஷ்டி சத்துகள் இப்பாலில் இருக்கின்றனவாம்.

டோரண்டோ கண்காட்சி

டோரண்டோ, ஜூன். 4— டோரண்டோ (கனடா) வில் நடைபெற்றுவரும் வர்த்தகக் கண்காட்சியில் இந்திய, அஸ்திரேலியா, பாகிஸ்தான், ஹாங்காங், சீனா, முதலிய நாடுகள் கலந்துகொண்டிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து பின்னி கம்பெனி (ஜவுளி) ஜெய்பூர் பலஸ் ஜுவெலலர்ஸ் (நகை) இந்தியா டிரேடிங் கம்பெனி (சாமான் தந்தசாமான் முதலியன)

பாகிஸ்தான் பிரதம மந்திரி தன்கோஷ் லியாகத்அலிகானுடன் ஜுன் 2-ந் தேதி இந்தச் சந்தைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

மதுரை மாவட்ட
தி. மு. கழக முதல் மாநாடு

ஜூன் திங்கள் 10, 11 சனி ஞாயிறுகளில்

சோழவந்தான் "செல்வம் பந்தலில்" நடைபெறும்

மாநாடு சனிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு

தோழர் டி. வி. நமசிவாயம் இன்னிசை அரங்குடன் துவங்கும்

★

தலைவர்:- தோழர் ஈ. வெ. கி. சம்பத்

துவக்குபவர்:- தோழர் கே. கே. நீலமேகம்

பொதுச் செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்கிறார்கள்

சனி இரவு "சிலை" நாடகம்

(மதுரை அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தார் நடிப்பது)

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெறும்

ஞாயிறு இரவு "சந்திரமோகன்" நாடகம்

(கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிப்பது)

தோழர் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்

324, அழகரடி, மதுரை. வரவேற்புக் குழுவினர்.

ஹங்கேரி எல்லையில் 10 பட்டாளங்கள்

லண்டன், ஜூன் 4— மார்ஷல் டிட்டோவின் தன்னம்பிக்கையைக் கண்டு காமின்பாம் நாடுகளுக்கு கொதிப்பு ஏற்பட்டிருக்கின்றது வென்றும் அவைகள் பலத்த ஏமஸ்திபுகளை எடுத்து வருகிறதென்றும் செய்தி கிடைத்திருக்கிறது

ஹங்கேரிக்காக்கார்யுகோஸ்லாவியை ஒட்டிய தன் எல்லையில் 10 மைல் தூரம் வரை உள்பகுதி பாதுகாக்கப்பட்ட பிரதேசமென்று அறிவித்திருக்கிறது. இதே மாதிரி பல்கேரியாவும் ருமேனியாவும் நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஹங்கேரி தன் எல்லை காவல் படையை அதிகரித்திருப்பதுடன் 100 மைல் நீளமுள்ள தன் எல்லையில் 100 பட்டாளங்களை சேர்த்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

தமிழ்த் திருமணம்

அய்யம்பேட்டை, ஜூன் 6— சென்னை பச்சையப்பன கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் தோழர் அன்புகணபதி அவர்களின் செல்வி-அன்புச் செல்வியின் கதணி விழாவும், தோழர் அ. சாமிநாதன்—சுபத்திரை ஆகியோரின் தமிழ்த் திருமணமும், மே 24 புதன்கிழமை காலை பசுபதி கோயிலில்நடைபெற்றன. அன்புகணபதி அவர்களின் தம்பி சுப்பிரமணியனின் குழந்தைகளான சுந்தரி, சுயம்பிரகாசம் ஆகியோர்க்குக் காதணி பூட்டலும் அன்றே நடைபெற்றது. மணமக்களையும், குழந்தைகளையும் பெரியோர் பலர் வந்திருந்து பாராட்டி வாழ்த்தினர்.

ஐஸ்கிரீமால் பற்களுக்கு ஆபத்து!

லண்டன், ஜூன். 6— ஒவ்வொருதரமும் சாப்பிட்டான பின் பற்களைத் தேய்ப்பதால் பற்கள் தேய்ந்துபோகும் என்று நியூஜிலாந்து டாக்டர் ஹிவாட் எச்சரித்திருக்கிறார்.

சாதாரணமாக தினம் பற்களைத் தேய்ப்பவர்களைவிட சாப்பிட்டபின் பல் தேய்ப்பவர்களின் பற்கள் அதிகம் தேய்கின்றன என்பதை இவர் ஆராய்ச்சிமூலம் கண்டுபிடித்திருக்கிறார்.

ஐஸ்கிரீம், பிஸ்கட்டுகள், கேக்குகள், தித்திப்பு பண்டங்கள் முதலியவைகளை உண்கிறதால் பற்களுக்கு ஆபத்து ஏற்படுவதை தவிர்க்கலாம் என்று இவர் கூறுகிறார்.

பீரட், ஜூன் 6— லெபனானில் விவசாயத் தொழில் வெளிநாட்டு பற்றிய புள்ளி விவரங்களை சேகரிக்க ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது. இந்த விவரம் மந்திரிசபையிடம்சமர்ப்பிக்கப்படும்.

புழக்கடையில் உயிர்காட்சிசாலை

லண்டன், ஜூன் 6— டார்செட்டிலதோழியர்டோரதி மோர்லு ஸாட்லர் என்பவர் தன்வீட்டுப் புழக்கடையில் ஒரு உயிர்காட்சி சாலையை ஏற்படுத்தி யிருக்கிறார். இந்தியாவிலிருந்து ஒரு புலியை வரவழைக்க இவர் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அதிகமாக தேய்த்துக் குளிப்பது ஆகாதாம்

லண்டன், ஜூன் 6— அதிகமாகத் தேய்த்துக் குளிப்பதால் தோல் வியாதி வருவதாக தென்னாப்பிரிக்காவின் சுதேசி வைத்திய நிபுணர் கூறியதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

தென்னாப்ரிக்காவில் யூரேனியம்

லண்டன், ஜூன் 6— மலைப்பாம்புகளும் மலேரியா ஜுரம் ஒட்டிக்கொள்ளும் இடமுமான தென்னாப்ரிக்காவில் உலகிலேயே எங்கும் காணப்படாத அளவுக்கு யூரேனியம் அகப்படுகிறதென்பதை அங்கு சென்று திரும்பிவந்துள்ள ஹென்றிமார்ட்டின் என்பவர் கூறுகிறார்.

இப்பிரதேசத்தில் ஆராய சென்ற இதர மூன்று பேர்கள் திரும்பி வரவேயில்லை. மார்ட்டின் மலேரியா ஜுரத்துடனும், விஷக்கடியுடனும் தப்பி வந்து இரண்டு மாதங்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று குணமடைந்தார்.

ஜோர்டனில் விவசாய பாங்கிகள்

ஏற்படுத்தும்படி கோரிக்கை

அம்மான், ஜூன் 6— விவசாய பாங்கிகள் ஏற்படுத்தி தங்களுக்கு உதவிசெய்யும்படி ஜோர்டன் விவசாயிகள், தங்கள் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர் இல்லாவிடில், பிரிட்டிஷ் மாண்டேட் ஆட்சியில் இருந்தபடி விவசாயக் கூட்டுறவு சங்கங்களையாவது ஏற்படுத்தும்படி அவர் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கொழும்பு, ஜூன் 6— இலங்கை பார்லிமெண்டின் 4-வது செஷன் ஜூன் 20-ந் தேதி ஆரம்பமாகிறது. கவர்னர்-ஜெனரல் சோல்பரி இதை ஆரம்பித்து வைப்பார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St, Madras-1.